**செய்தி வெளியீடு எண்: 800** **நாள்: 31.10.2018**

<u>செய்தி வெளியீடு</u>

தகுதி வாய்ந்த மனநல மருத்துவர்கள்/மனநல சமூகப்பணியாளர்கள்/ மனநல உளவியலாளர், மனநல செவிலியாளர்கள் மற்றும் மற்ற மனநல சிறப்பாளர்களிடமிருந்து மனநல சேவை சட்டம் 2017ன் கீழ் தமிழ்நாடு மனநல ஆணையத்தின் தமிழ்நாடு மாநில மனநல ஆணையம் உறுப்பினராக நியமனம் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் www.tnhealth.org என்ற இணையதள முகவரியில் தகுதிகள், விண்ணப்படிவம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பற்றி தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த சான்றிதழ்/ஆவணங்களுடன் தபால்/ விரைவு தபால்/நேரிலும் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம், அரசு மனநல காப்பக வளாகம், மேடவாக்கம் குளச்சாலை, கீழ்பாக்கம், சென்னை-10 என்ற முகவரிக்கு அனுப்பலாம். தொலைபேசி எண்.044-26420985 மற்றும் கைபேசி எண்.98400 88572. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வருகிற23.11.2018ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**